**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:DVC.7/2023**
**RW :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Caste | : |
| Father 's Name/ Husband Name | : ஸ்ரீரங்கன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)
**(19.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா மேலக்கோட்டை வாடகை வீட்டில் குடியிருந்த போது வீட்டின் உரிமையாளரால் எனக்கு கைப்பட எழுதிக் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் அசல் (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன்) அசல் **எ.ம.சா.ஆ,1 ஆகவும்**, 20.05.2011ம் தேதி எதிர்மனுதாரர் புகார்தாரருக்கு பதிவு செய்து கொடுத்த கிரைய ஆவணம் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ 2 ஆகவும்,** புகார்தாரர் கவிதா என்பவரிடம் கடன் வாங்கிய புரோ நோட்டு நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது, மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை

குறித்து ஆட்சேபிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன்) **எ.ம.சா.ஆ.3 ஆகவும்**, புகார்தாரர் மீது கவிதா கொடுத்த புகார் மனு (மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன்) **எ.ம.சா.ஆ.4 ஆகவும்**, புகார்தாரரின் சகோதரர் கண்ணன் என்பவர் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த உறுதிமொழி பத்திரம் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டும், மனுதாரர் தரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ. 5 ஆகவும்**, எதிர்மனுதாரர், புகார்தாரர் மற்றும் அவர்கள் உறவினர்கள் மீது காவல்துறையில் கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது நகல் (அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.6 ஆகவும்**, எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளையில் CRP (MD) 1598/2025 in CMP (MD) No.8241/2025 இடைக்கால தடை உத்தரவு கணினி நகல் (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.7 ஆகவும்**, எதிர்மனுதாரரின் மருத்துவ டிஸ்சார்ஜ் சம்மரி நகல் (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.8 ஆகவும்**, குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**